30—

வீட்டுவசதித் துறையின் மூலம் பட்டுக்கோட்டை நகரில் அடுக்குமாடி கட்டிடம்.

* 19090— திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுவசதித் துறையின் மூலம் பட்டுக்கோட்டை நகரில் அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் என்ல், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத், தலைவர் அவர்களே, அமைச்சர் கொடுத்த பதில் அவ்வளவு நன்றாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மேலும் எனது தொகுதி பட்டுக்கோட்டை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு நன்றாக இல்லை. ஆனால் பதில் நன்றாகத்தான் இருக்கிறது.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: தொழில் வளம் வளரக்கூடிய நிலையிலே எனது தொகுதி இருக்கிறது. மேலும் நல்ல முறை யிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்த அரசு விரும்பினால் அதை எப்பொழுது செயல்படுத்தும், மீண்டும் அதைப் பரி சீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பட்டுக் கோட்டையில் தமிழ்நாடுஅரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 120 அடுக்குமாடி குடியிருப்புகளையும், மேலும் மாவட்ட முனிசீப், குற்றவியல் நீதிபதி, வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர்களுக்கு முறையே ஒவ்வொரு குடியிருப்பை யும் கட்டியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு

1993 அக்டோபர் 27]

வசதி திட்டத்தின் கீழ் பட்டுக்கோட்டையில் உக்கடை கிராமம், பொன்னன் சாயன் கோட்டையில் 8 ஏக்கர் நிலப்பரப்பு கையகப் படுத்தப்பட்டு, இதில் குறைந்த வருவாய் பிரிவினருக்காக 113 வீடுகளையும், நடுத்தர வருவாய் பிரிவினருக்காக 264 வீடு களையும் சுமார் 574.77 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் தேசிய வீட்டுவசதி வங்கியின் ஒப்புதல் பெற்றபின் செயல்படுத்தப் படும். எனவே, புதியதாக அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

31—

பூலாங்குளம் கிராம துவக்கப்பள்ளியில் சத்துணவு உண்ண கூடுதல் மாணவர்களுக்கு அனுமதி.

*20148—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பூலாங்குளம் கிராம ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவு உண்ண கூடுதல் மாணவர்களுக்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூகநலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மிக முக்கியமான கேள்வியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக மகிழ்ச்சி. அதேசமயத்தில் பல்வேறு பள்ளிக் கூடங்களில் மாணவர்களுடைய ஸ்ட்ரெங்த் அதிகரிக்கும்போது இந்தச்சத்து உணவானது கூடுதல் மாணவர்களுக்கு கொடுக்கப்படாததனால் பல்வேறு பள்ளிக்கூடங்களில் அதைப் பிரித்து அதாவது 100 மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால் 60 மாணவர் களுக்குத்தான் சத்துணவு கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கின்றபோது ஸ்ட்ரெங்த் அதிகரிக்கும்போது அதையே பிரித்துக் கொடுக்கின்றார்கள். இதனால் மாணவர்களுக்குப்